விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 மார்கழி 24 ரபி - ஆகி 16 இதழ் 325
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 8–1–85

# ஆலயத்துள் ஆயுதங்களா? மன்னார் ஆயர் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

மன்னார் பகுதியிலுள்ள வங்காலை தேவாலயத்தில் ஆயுதங்களும் வெடிமருந்துகளும் கண்டெடுக்கப்பட்டதாகவும், அவ்வாலயம் ஆயுதப்படையினருக்கு எதிரான தளமாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் அரசசெய்தி சாதனங்கள் ஊடாக வெளிவந்த செய்திகளை மன்னார் ஆயர் அதி வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கடுமையாக ஆட்சேபித்திருப்பதுடன் அவை முற்றிலும் பிழையானவை என்றும் தெரிவித்துள்ளார்.

ஆயர் சவுந்தரநாயகம் ஆண்டகை வங்காலைச் சம்பவம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:

வங்காலைப் பங்குத் தந்தையாக கடமையாற்றிக்கொண்டிருந்த வண பிதா. மேரி பஸ்ரியன் அடிகளார் இம்மாதம் 6ம் திகதி ஞாயிறு தினம் அதிகாலை அவரது பங்குமனையில் வைத்து ஆயுதப்படையினரால் படுகொலை செய்யப்பட்டார் என்ற துக்கம் நிறைந்த செய்தியை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்

[4ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

# இனப்பிரச்னை: அமைதித் தீர்வு காண்பதில் காமன்வெல்த் செயலர் ஈடுபடவிருக்கிறார்!

[இ. கந்தசாமி]

இலங்கை இனப் பிரச்னையைச் சமாதானமாகத் தீர்த்துவைக்கும் முயற்சியில் காமன்வெல்த் நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகம் திரு. சிறிதத்ரம்பால் ஈடுபடவிருக்கிறார்.

பல காமன்வெல்த் நாடுகள் திரு ரம்பாலை அணுகிக் கேட்டுக்கொண்டதன்பேரிலேயே அவர் இம் முயற்சியில் இறங்கவிருப்பதாக நம்பகமாக அறியப்படுகின்றது. இலங்கையில் மனிதஉரிமைகள் மீறப்படுவது குறித்து அவர் தம்மை அணுகிய நாடுகளிடம் கவலை தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

முதலில் ஒரு குழுவை நியமித்து இலங்கையின் இனப் பிரச்னையின் முழு விபரங்களையும் ஆராய்ந்து சேகரிக்க அவர் ஏற்பாடு செய்யவிருப்பதாகவும் தெரிகிறது இந்தக் குழுவில் தமிழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரும் சிங்கள விரிவுரையாளர் ஒருவரும் இடம்பெறுவராம். இலங்கை சரித்திரம், அண்மையில் நடந்த சர்வகட்சி மகாநாட்டின் விபரம், கடந்தகால ஒப்பந்தங்கள் போன்றவற்றை இக்குழு ஆராயும். இக் குழு தாக்கல் செய்யும் அறிக்கை கிடைத்தபின் இலங்கை இந்திய நாடுகளுக்கு திரு. ரம்பால் விஜயம் செய்யவிருக்கிறார்.

# சைக்கிள் பாவனை அனுமதி பெறுவதற்கு விண்ணப்ப படிவங்களை தாமே தயாரித்து வழங்க வேண்டும்!

## பாவனையாளர்களுக்கு ராணுவ இணைப்பதிகாரி அறிவிப்பு

(பா அனந்தகிருஷ்ணன்)

**சைக்கிள் பாவனைக்கான அனுமதிப்பத்திரங்களை பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை சைக்கிள் பாவனையாளர்கள் தாமே தயாரித்து நிரப்பி தத்தமது பகுதி உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களில் ஒப்படைக்க வேண்டும்.**

சைக்கிள் அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பாக யாழ். மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் நளின் செனிவரத்ன பத்திரிகையாளர் மகாநாடென்றை நேற்று குருநகர் இராணுவ முகாமில் நடத்தினர். அம் மகாநாட்டில் மேற்படி விபரம் தெரிவிக்கப்பட்டது.

யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், யாழ் பொலிஸ் அதிபர் திரு. ஐ. ரி. கனகரத்தினம், சிரேஷ்ட பொலிஸ் அதிபர் திரு. குணவர்த்தன, உதவி அரசஅதிபர் எஸ். பாலசிங்கம், ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்

சைக்கிள் அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள், சொந்தமாகவே

[4-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## பாடசாலைகள் மூலமாக மாணவர்கள் பெறலாம்!!

[யாழ்ப்பாணம்]

பாடசாலை மாணவர்கள் பாடசாலை அதிபர்கள் மூலமாக சைக்கிள் பாவனைக்கென விண்ணப்பிக்கலாம் என்று அரச அதிபர் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர்கள்மாணவர்களின் விண்ணப்பப்படிவங்களைச் சேகரித்து அப் பாடசாலை அமைந்துள்ள அரச அதிபர் பிரிவுக்கு சமர்ப்பிப்பர். தொடர்ந்து அனுமதப்பத்தரங்கள் அப் பிரிவினல் பெற்றுக்கொடுக்கப்படும் என்று மேலும் அவர் கூறினர். (கி)

## வண. ஆயர் மார்க்கஸ்பெர்னண்டோ விடுத்துள்ள கோரிக்கை

(கொழும்பு)

வங்காலையில் கத்தோலிக்க குருவானவர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக உயர்மட்ட விசாரணை நடத்தப்படவேண்டும், அதன் விபரம் மக்கள் முன்வைக்கப்படவேண்டும் என கத்தோலிக்க மேற்றாணிமார் சபையின் தலைவர் அதி வண. மார்க்கஸ் பெர்னண்டோ இலங்கை அரசைக் கேட்டுள்ளார்.

# ராணுவம் தேடுதல் நடத்துவதால் காடுகளுக்குள் செல்லாதீர்!

## வவனியா மக்களுக்கு யோசனை

[வவனியா]

வவனியா பகுதி பொது மக்கள் எந்த சந்தர்ப்பத்திலும் பீதியடைந்து காடுகளில் அடைக்கலம் புகவேண்டாம் என்று மக்களுக்கு கூறும்படி வவனியா பிரஜைகள் குழுவுக்கு வவனியா மாவட்ட இணைப்பதிகாரி கேணல் கிங்ஸிலி ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொந்தகாரன் குளத்தில் இடம்பெற்ற சம்பவத்தினை நினைவுபடுத்திய இணைப்பதிகாரி தீவிரவாதிகளைத்தேடி இராணுவம் காடுகளில் செல்லவேண்டியுள்ளது என்றும் எனவே பொதுமக்கள் தத்தமதுவீடுகளில் இருக்கும்படி கேட்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

(4-ம் பக்கம் 2ம் கலம் பார்க்க)

# தனியார் பஸ் விபத்தில் 7 பேர் பலி!

[கொழும்பு]

கிரிபத்கொட சந்தியில் இரு தனியார் பஸ்கள் மோதிக்கொண்ட விபத்தில் 7 பேர் பலியனார்கள். இவர்களில் பெண்களும், பிள்ளைகளும் அடங்கியிருந்தனர். 12 பேர் காயமடைந்துள்ளனர். ஐவருக்கு கடுமையானகாயம் ஏற்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகிறார்கள்.

# சாவகச்சேரி நீதிமன்றம் தீக்கிரை!

(சாவகச்சேரி)

இரண்டு தடவைகளாகச் சேதமாக்கப்பட்ட சாவகச்சேரி நீதிமன்றக் கட்டிடம் நேற்றிரவு இனந்தெரியாத இளைஞர்களால் தீக்கிரையாக்கடபட்டுள்ளது.

கட்டிடத்தின் கூரைகள் நேற்று மாலையிலும் எரிந்துகொண்டிருந்ததுடன் மரங்கள் தீராந்திகள் எரிந்து கீழே விழ்ந்து தளபாடங்கள் எரிந்துகொண்டிருந்தன.

நேற்றுமுன்தினமிரவு சுமார் 9 மணிபோல் சில வாலிபர்கள் அவ்விடம் வந்து காவலில் இருந்த இரண்டு காவலாளிகளை துரத்திவிட்டு, நீதிமன்றக் கட்டிடத்துக்கு தீவைத்சதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தினையடுத்து சாவகச்சேரி நகரில் பீதி நிலவுகின்றது. அச்சம் காரண

(4ம் பக்க 5ம் கலம் பார்க்க)

# அனுமதிப்பத்திரங்கள் சோதனை: பொதுமக்கள் ஓடுவதைத் தவிர்த்து விபரங்களைத் தெரிவிக்கவும்!

## பிரிகேடியர் வேண்டுகோள்!!

[யாழ்ப்பாணம்]

''ஆயுதப்படையினரைக் கண்டதும், எவரும் ஓடவேண்டாம்'' அவ்விடத்தில் நின்று அவர்கள்கேட்கும் அடையாள அட்டையையோ, வேறு வாகனங்கள் தொடர்பான பத்திரங்களையோ காட்டுங்கள்.

யாழ். மாவட்ட இணைப்பதிகாரிபிரிகேடியர் நளின் செனவரத்தின நேற்று குருநகர் இராணுவ முகாமில் நடந்த மகாநாட்டில் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

நளின் செனவரத்தின மேலும் கூறியதாவது:-

[4-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

இருபாலை தெற்கில், வீரபத்திரர் கோவிலுக்கருகாமையில் 3 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு தொடர்பு:- பாலசுந்தரம், ''சரோஜி இல்லம்'', நந்தாவில் அம்மன் கோவிலடி, கொக்குவில்கிழக்கு.
1263

## சோதிடம்

வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி? பன்னிரு ராசிகளின் பூரண பலன் விலை ரூபா 2/- 'இரா. நெடுஞ்செழியன் தமிழக முதன் மந்திரி ஆகும் வாய்ப்பு உண்டு'' என்பதை முன்கூட்டியே அறிவிக்கும் சோதிடர்: V. A. சிவராசா, வேலணை.
1268

## வாடகைக்கு

உரும்பிராயில் சகல வசதிகளுடன், பாதுகாப்பு, நல்ல சுற்றுடல், 3 படுக்கை அறை கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. வாடகை 500/- ரூபா வரை. விபரங்கட்கு:சிவநேசன் சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு.
1267

## தவறிவிட்டது

சரோஜினிதேவி இராசையா நாவலடி லேன், மானிப்பாய் தெற்கு இதற்குரிய தேசிய அடையாள அட்டை மானிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும். 1269

## கேள்விப் பத்திர அறிவித்தல்

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையிலுள்ள மல சல கூடங்கள், கான்கள், சாப்பாட்டு அறைகள், அதன் சுற்றுடல் ஆகியவ றைத் துப்புரவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திர விண்ணப்பங்களை 19`5-01-15-ந் திகதி பிற்பகல் 4-00 மணி வரை தொழிற்சாலை விநியோக உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்வதோடு இதர விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

விநியோக உத்தியோகத்தர்,
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை,
1985-01-03. காங்கேசன்துறை. (1227)

## அந்தியேட்டியும் வீட்டுக்கிரியை அழைப்பும்

திரு. செல்லையா சுப்பிரமணியம்



தோற்றம்: 3-2-20

மறைவு: 10-12-84

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. செ. சுப்பிரமணியம் (Whittal Boustead Ltd.) 10-12-84ல் இறைவனடி எய்தினார். அன்னாரின் ஆத்ம சாந்திக்குரிய அந்தியேட்டிக்கிரியைகள் 8-1-85 செவ்வாய்க்கிழமை காலை கீரிமலையிலும் 9-1-85 புதன் கிழமை வீட்டுக்கிரியை அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வைபவத்தில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, தாய், சகோதரர்,
மைத்துனர், மருமக்கள்.
'சிவ கிரி', கட்டுவன். 1214

## மரண அறிவித்தல்

வணக்கத்துக்குரிய
### பிதா. மேரி பஸ்ரியன்

இளவாலையை பிறப்பிடமாகக் கொண்ட வண. பிதா மேரி பஸ்ரியன் அகால மரணம் அடைந்துள்ளார். இவர் திரு. என். வி. மனுவல்பிள்ளை (ஓய்வு பெற்ற மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்) திருமதி என். வி. மனுவல்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், அன்ரன் (U. S. A.), Anne Fatima (U. K ) Joseph (U. S A.) என்பவரின் அன்புச்சகோதரனும் P. E. Retnasingam (U. K.), Barbara (U. S. A.), என்பவர்களின் மைத்துனரும், காலம் சென்ற திரு. சாம் அல்பிறெட் என்பவரின் மருமகனும் ஆவார். இவர் வங்காலை புனித அன்னம்மாள் தேவாலயத்தில் பங்குத் தந்தையாக கடமையாற்றிக்கொண்டு இருந்தவர். இவரின் ஆன்ம சாந்திக்காக யாழ். புனித மரியாள் பேராலயத்தில் அதிவண. ஆயர் தியோகுப்பிள்ளை அவர்களால் இன்று (8-1-85) காலை 9 மணியளவில் இரங்கற்பலியொன்றும் ஒப்புக்கொடுக்கப்படும். 1264

## தவறிவிட்டது

கடந்த 4-1-85 அன்று பண்டத்தரிப்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மினி பஸ்சில் வரும்போது பஸ்சில் எனது அடையாள அட்டையும் இல.41-2501055x, சாரதி லைசன்ஸ்உம் இல. DL-145166 தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும் B. J. மரியதாஸ், C/o அம்பலவாணர் அன்சன்ஸ், 196, கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1277

## சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)

### கிறே நைலக்ஸ் விற்பனை

பாவு 140 ஊடை
72'' அகலம் 46''

மேற்குறிப்பிட்ட அளவினை உடைய கிறேநைலக்ஸ் கேள்வி மூலம் விற்பனைக்குண்டு. விரும்புவோர் மீளளிக்கக்கூடிய பிணைப் பணம் ரூபா 1000/- செலுத்தி சங்கத்தால் வழங்கும் கேள்வி விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கவும். விண்ணப்பப்படிவம் ரூபா 10/- சங்கத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 20-1-85. விண்ணப்பங்கள் யாவும் ''தலைவர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை'' என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர்
சங்கானை ப. நோ. கூ. சங்கம்
சங்கானை
5-1-85 1265

## வயோதிபர் கொலை

(வவனியா)

வவனியாவில் முன்னாள் கிராமசபைத் தலைவரான சுப்பையா என்ற வயோதிபர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்

வீமன்கல்லு என்ற இடத்தில் அவரது வீட்டில் வைத்தே இனந்தெரியாதவர்களினால் அவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

வீமன்கல்லு என்ற கிராமம் புராதன தமிழ் பூர்வீகக் குடிமக்களின் பிரதேசமாகும். 1977-ம் வருட இனக்கலவரத்தில் இறந்தவருடைய சொத்துக்கள் முற்றாக அழிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது:

## அன்னையர் முன்னணி நன்றி

(யாழ்ப்பாணம்)

புதிய நெருக்கடிகளினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளருக்கு உதவுவதற்காக உணவுப் பொருட்களை வழங்கி உதவிய பொதுமக்களுக்கு யாழ். அன்னையர் முன்னணி தனது நன்றியைத் தெரிவித்துள்ளது,

குறிப்பாக ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கைவங்கிக் கிளை ஊழியர்கள் திருநெல்வேலி,. கல்வியங்காடு, வண்ணார்பண்ணை மக்களுக்கு அன்னையர் முன்னணி நன்றி தெரிவித்துள்ளது.

மேற்கொண்டும் உணவுப் பொருட்கள் தேவைப்படுவதால் உணவுப்பொருட்களை குறிப்பாக அரிசி போன்றவற்றை கீழ்க்காண்பவர்களிடம் ஒப்படைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

சுண்டிக்குளி:- திருமதி கணேஷ் பாலசிங்கம், 25, கச்சேரி வீதி, யாழ்ப்பாணம், கந்தர்மடம்:- எம். தமயந்தி, இல. 1, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.

# ''க. பொ. த. பரீட்சையை மீண்டும் நடாத்தவும்''

## இலங்கை ஆசிரியர் சங்க வடபிரதேசக்கிளை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்க வடபிரதேசக்கிளை 1984 டிசம்பர் க. பொ. த. பரீடசையை மீண்டும் நடத்துமாறு கல்வி அமைச்சரைக் கேட்டுள்ளது

இது தொடர்பாக இச் சங்கத்தினால் கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது:

''இப்பரீட்சாத்திகள் குழப்பத்துக்குள்ளாகி பரீட்சை எழுதக்கூடிய மனோநிலையில் இருந்திருக்க முடியாதென்பதை தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறோம்

''இப்பிரதேசத்தில் நிலவிய சூழ்நிலையையும், பரீட்சை நடத்துவதிலுள்ள பல்வேறு கஷ்டங்களையும் கருத்திற் கொண்டு வடபிரதேச கலவித்திணைக்கள அதிகாரிகளைச் சந்தித்து எடுத்து விளக்கியதுடன் பரீட்சையை பின்போடும்படி கேட்டுக்கொண்டோம். எமது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டு பரீட்சை நடாத்தப்பட்டது.

''பரீட்சை நடைபெற்ற பொழுதும் ஏற்றுக்கொள்ள முடியாத பல ஒழுங்கீனங்கள் இடம்பெற்றன.

''பரீட்சை ஆரம்பமான 8-1-84 அன்று நண்பகல் 12 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்தது அத்தினத்தில் காலை 8-30 தொடக்கம் 11-30 வரை தமிழ் மொழி II பிற்பகல்1-30 தொடக்கம் 2-15 வரை தமிழ் மொழி I ஆகிய இரு வினாத்தாள்கள் நேர சூசியில் இடம்பெற்றிருந்தன சில பெற்றோர் பிள்ளைகளைபரீட்சை நிலையத்திற்கு அனுப்பவில்லை. சில பரீட்சை நிலையங்களில் தமிழ் மொழி II மட்டும் நடைபெற்றது சில நிலையங்களில் மிகக் குறுகிய ஓய்வு வேளை மட்டும் கொடுக்கப்பட்டு ஊரடங்குச்சட்ட வேளையிலேயே தமிழ் மொழி I வினாத்தாள் வழங்கப்பட்டு பீதியுற்ற நிலையில்மாணவர்கள் விடையளித்துள்ளனர். சில பெற்றோர் பிற்பகல் பரீட்சைக்கு தமது பிள்ளைகளைச் செல்லவிடாது தவிர்த்துள்ளனர்.''

## வவனியா சம்பவம்

### நான்கு சடலங்கள் கையளிப்பு

வவனியா

வவனியா கொந்தகரான் காட்டில் இராணுவம் சுட்டதினால் பலியான நால்வரது சடலங்களும் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

சின்னப்பு யோகராஜா (45 வயது) யோகராஜா யோகேஸ்வரி (வயது18), யோகராஜா யோகேஸ் (14 வயது), துரையப்பா ஞானம்பிகை (வயது 27) ஆகியநால்வருமே பலியானவர்கள்.

இச்சம்பவத்தில் காயப்பட்ட யோகராஜா யோகானந்தம் அவசர கிகிச்சைக்காக யாழ் அரசினர் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

சோகமே உருவான காட்சியாக் நால்வரது இறுதி கிரியைகளும் இடம் பெற்றது.

## பாடசாலைகள் ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் நேற்று ஆரம்பமாகியது. பாடசாலைகளில் மாணவர்கள் வரவு மிகவும் குறைவாக காணப்பட்டது.

## பருத்தித்துறையில் மண்ணெண்ணெய் விநியோகம்


(புலோலி)

பருத்தித்துறைப் பகுதிமக்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகத்தை ஒழுங்காக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை பாவனையாளர் சங்த் தலைவர் பேராசிரியர் வீ கே கணேசலிங்கம் பருத்தித்துறை ப நோ. கூட்டுறவுச் சங்கத்தைக் கேட்டுள்ளார்

மெழுகுவர்த்தியின் விலையைச்சங்கம் திடீரென உயர்த்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் தட்டுப்பாடாக இருப்பதனால் மெழுகுவர்த்தியை முன்னர் விற்பனை செய்த விலைக்கே (பழைய விலை) விற்பனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றும் கேட்டுள்ளார்.

## முதலாண்டு நினைவஞ்சலி

அமரர்
### திரு. காசிநாதர் சண்முகம்பிள்ளை
தங்கோடை காரைநகர்



மண்ணுலகு: 19-03-1900

விண்ணுலகு: 8-01-1984

எங்கள் ஒளிவிளக்கே, உயிர்த்தெய்வமே, அன்பின் இருப்பிடமே, நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து ஓராண்டு காலமாகிவிட்டது. உங்களது திருவுருவத்தையும் அன்பின் செய்கைகளையும் எங்களால் ஒருபோதும் மறக்க முடியாது உங்களது ஆத்மா இறைவனுடன் சேர்ந்து மகிழ்ந்திருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள். மருமகள், பேரன்கள்,
பேத்திமார், பூட்டன், பூட்டிமார்.
(1271) தங்கோடை, காரைநகர்.

# "இந்திய-அமெரிக்க நல்லுறவு வலுப்படுத்தப்படவேண்டும்"

## 'நியூஸ் வீக்' சஞ்சிகைக்கு ரஜீவ் பேட்டி

புதுடில்லி ஜன. 7

"இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்குமிடையே தற்போது நிலவிவரும் நல்லுறவு மேலும் வலுப்படுத்தப்படவேண்டும்."

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு ரஜீவ் காந்தி அமெரிக்க 'நியூஸ் வீக்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"இந்தியா சோவியத் யூனியனின் பக்கம் சார்ந்திருப்பதாக அமெரிக்கா கருதுவது தப்பாகும்.

"பாகிஸ்தானுடன் இந்தியாவுக்கு எந்தவிதமான பூசலுமில்லை. பாகிஸ்தானுக்குப் புதிதாக ஆயுதங்கள் வழங்கப்படுவதால். துணைக்கண்டத்தில் ஆயுதப்போட்டி ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தில்மட்டுமன்றி, நாட்டிலே கூடப் புதிய தலைமுறையொன்று ஆட்சியைப் பொறுப்பேற்றுள்ளது'' என்றார்.

## கடும் குளிர் 290 பேர் பலி!

புதுடில்லி ஜன. 7

வட இந்தியாவில் நிலவிவரும் கடும் குளிருக்கு 290 பேர் பலியாகியுள்ளனர்.

## பார்த்தசாரதியை சந்தித்தார்

சென்னை ஜன. 7

தமிழ்நாடு கைத்தொழில் அமைச்சர் திரு. திருநாவுக்கரசு, இந்திய வெளியுறவுக் கொள்கை வகுக்கும் கமிட்டித் தலைவர் திரு ஜி. பார்த்தசாரதியைச் சந்தித்தார்.

இலங்கை இனப்பிரச்னை குறித்து இவர்கள் கலந்துரையாடியதாகத் தெரியவருகிறது.

இந்திய உப-ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட் ராமனையும், திரு. திருநாவுக்கரசு சந்தித்தார்.

## 'முழு இந்தியாவுக்குமே உரிய பிரச்னை'

(சென்னை)

"இலங்கையின் இனப் பிரச்னை தமிழ் நாட்டுக்கு மாத்திரம் உரிய பிரச்னை அல்ல. அது முழு இந்தியாவுக்குமே ஒரு பிரச்னையாகும்'' என்று இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளதாக

### ரஜீவ் கருத்துப்பற்றி திருமதி மரகதம்

இந்திய சமூகநல இணை அமைச்சர் திருமதி மரதகம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரான பின்பு தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்த அமைச்சருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(கு-வெ)

## விபரங்கள் சேகரிக்கிறது

(வவனியா)

வவனியா மாவட்டத்தில் அண்மைக் காலமாக இடம் பெற்ற சம்பவத்தின் முழு விபரத்தினையும் வவனியா பிரஜைகள் குழு சேகரிக்கின்றது. பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாகத் தலைவர் சட்டத்தரணி திரு எக்ஸ் சொர்ணபாலாவுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

உலர்ச்சேதம், உடைமைகள் சேதம், காணமல் போனவர்கள் பற்றிய விபரங்களை வவனியா பிரஜைகள் குழு சேகரிக்கின்றது

## பாலர் பாடசாலைத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் அருணோதய மன்றத்தின் பாலர் பாடசாலைத் திறப்பு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

மானிப்பாய் பங்குத் தந்தை வண. பிதா ஏ. சி கிறிஸ்தோபர் அடிகளார் இப்பாடசாலையைத் திறந்து வைத்து உரைநிகழ்த்தினார்.

திரு ம. யேசுரத்தினம், மன்றத் தலைவர் திரு கே. எஸ். மரியதாஸ் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## ராணுவப் பாதுகாப்புடன் இறக்குமதி வேலைகள்!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்த சீனிக்கப்பல் இறக்குமதி வேலைகள் ராணுவ பாதுகாப்புடன் நடந்தது

கடந்த வெள்ளிக்கிழமை காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்த 1000 தொன் சீனிக்கப்பலில் இருந்து சீனி இரு தினங்களில் இறக்கி முடிக்கப்பட்டது.

கடந்த மாதம் காங்கேசன் துறைக்கு வந்த உணவுக் கப்பலில் குண்டு வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து இம்முறை வந்த கப்பலுக்கு முழு அளவிலான பாதுகாப்பு வழங்கப்பட்டது.

## யாழ். மாவட்ட உணவுக்களஞ்சியங்களில் அரிசி, மாகையிருப்பில் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்கில் உள்ள உணவுக் களஞ்சியங்களில் அரிசி, மா கையிருப்பில் இல்லாததனால், தட்டுப்பாடு ஏற்படும் என அஞ்சப்படுகிறது

ரயில் மூலம் கிளிநொச்சி வரை அரிசி, மா முதலியவற்றை கொண்டு வந்து, அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு லொறிகள் மூலம் கொண்டுவர முயற்சி எடுக்கப்பட்டுவருகிறது.

ப. நோ. கூ. சங்கங்களிடம் போதிய லொறிகள் இல்லாததனாலும், யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி வரை பிரதான வீதிகள் மோசமாகப் பழுதடைந்து இருப்பதாலும், வழிகளில் ஆயுதப் படையினர் வாகனங்களை சோதனையிடுவதால் ஏற்படும் தாமதத்தினாலும், கிளிநொச்சியில் நண்பகலுடன் அலுவலக வேலைகள் தினமும் முடிந்துவிடுவதாலும், லொறிகள் மூலம் அரிசி, மா போன்றவற்றை கொண்டு வருவது சாத்தியமாகாது என்று கருதப்படுகிறது

மேலும் அரிசி, மாவை வைப்பதற்கு கிளிநொச்சியில் பாரிய களஞ்சியம் இல்லாததினால் ரயில் வகனில்தான் நீண்ட காலத்திற்குவைத்திருக்கவேண்டிய நிலை ஏற்படுமென்றும், இதனால் புகையிரதப் பகுதியினருக்கு நஷ்டம் ஏற்படலாம் என்றும் கூறப்படுகிறது.

யாழ் மாவட்ட தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு சிவமகாராசா, ரயில் மூலம் அரிசி. மா அனுப்புவது சாத்தியமில்லையென்றும், கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அரிசி. மாவை அனுப்ப ஏற்பாடுசெய்யுமாறு உணவு ஆணையாளர், கூட்டுறவு ஆணையாளர், யாழ். அரசாங்க அதிபர் ஆகியோருக்கு தந்தி மூலம் கேட்டுள்ளார். [க]

## ✯ வியாழமாற்றம் இன்று

# விவசாயம், கைத்தொழில்துறைக்கு வெற்றிக்குரிய மாற்றம்!

இரத்தாக்ஷி வருடம் மார்கழிமாதம் 23ந் திகதி இன்று (8-1-1985) திங்கட்கிழமை பின்னிரவு 55 நாழிகை 48 விநாடியில் நடைபெற இருக்கும் வியாழமாற்றம் பொதுவாக மக்களுக்கு ஓரளவு விமோசனம் அளிக்கும் அமைதியும் சமாதானமும் லவினாலும் அடிக்கடி மனக்கிலேசமும் உருவாகவழியுண்டு இதுவரைஉலகப் பெரியார்களின் வரிசையில் உயர்ந்து நின்ற பல பெரியார்கள் மதிப்பிழந்து தாழ்வுநிலை எய்துவர் தொழிலாளர் மத்தியில் பதட்டநிலை காணப்படினும் முடிவு மகிழ்ச்சியாகவே இருக்கும். தொழில்வளம் பெருகவும் இடமுண்டு. பல புதிய கைத்தொழில்கள் எமது நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்படும்.

விவசாயத்துறையில் எமது நாடு எதிர்பாராத முன்னேற்றம்காணும் விவசாயிகள் சற்று நலிந்தாலும் இறுதியில் மகிழ்ச்சி கிடைக்கும். மக்கள் பசிப்பிணியிலிருந்துவிலகிவாழ வழிவகுக்கும் அரசாங்க அலுவல்களில் ஈடுபடுவோர்க்கு ஏற்றமும் இறக்கமும்சமமாகவே காணப்படும். கவனயீனங்கள் ஆபத்துக்கு வழிவகுக்கும்.

வாகனச் சொந்தக்காரர்களுக்கு மந்தநிலைகாணும். குடும்பவாழ்க்கையில் ஈடுபடுவோர் குதூகலத்தை அடையார் காதல் உலகை பொறுத்தவரை ஏமாற்றமும். இடர்பாடுகளும் காணப்படுகின்றன குறிப்பாக பெண்கள்அவமதிக்கப்படுவர்.

நமது நாட்டில் கல்விவளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்கள் உலகத்தின் கவனத்தைக் கவரும். மாணவர்கள் மந்தநிலை அடைவர். சுருங்கக் கூறின் இந்த வியாழமாற்றம் விவசாயவிருத்திக்கும். கைத்தொழில் பெருக்கத்திற்கும் வெற்றிவாகை சூடிக்கொடுக்கும் மாற்றமே.

மகிழ்வர். வணிகர்களாயின் வருமானம் கிடைக்கும்.

மிதுனம்:- உறவினர் பகை. சொந்தத்துள் எதிர்பாராத துன்பம் விவசாயிகளுக்கு வீண் செலவு. கடற்தொழில் புரிவோருக்கு கவலை. கண்ணியத்துடன் நடப்பின் கசப்பான சம்பவங்களைத் தடுக்கலாம். வாசனச் சொந்தக்காரர்களுக்கு எதிர்பாராத நஷ்டம் உண்டு ஆசிரியர்கள், அரச ஊழியர்கள்கடமையில் கவனம் வேண்டும்.

கடகம்:- தனித் தொழில் புரிவோர் தனவரவு காண்பர். உத்தியோகஉயர்தலும்உண்டு.

—திருமலை க. வே. ரவீந்திரன் —

மேடம்:- வாகனச் சொந்தக்காரர்களுக்கு மந்த நிலையும் விவசாயிசளுக்கு வெற்றியும் கிட்டும் செலவு அதிகரிக்கும். சிந்தனையால் நலம் உண்டு. அரச ஊழியருக்கு இடமாற்றம் உண்டு. கன்னியர் வாழ்வில் களங்கம் உண்டாம் வியாபாரிகளுக்கு சமமான வருமானம் உண்டு. திடீர் பிரயாணத்திற்கும் இடமேற்படலாம்

இடபம்:- புண்ணிய விருப்பும், பொன் பொருள் சிறப்பும். நீர்த் தொழில் விருத்தியும், நினைத்தவை நடப்பதும் உண்டு. விவசாயிகள் விமோசனம் அடைவர். அரசியல் வாதிசளுக்கு அவதானம் வேண்டும். ஆசிரியர்கள் அக மாணவர்கள் மத்தியில் கல்விக் கவலை நீ கும் குடும்பத்தவர் களுக்கு புத்திரர் மகிழ்ச்சியும், பொன் பொருள் வரவும் உண்டாம். காதலர் வாழ்வில் களிப்பூட்டும் நிகழ்ச்சிகள் நடைபெறும். நோய் பிணியும் தீரும்.

சிங்கம்:- சத்துருக்களால் சஞ்சலம் உடல் நலக்குறை. உறவினர் மத்தியில் பொறுமையுடன் நடப்பின் நலம் அரச ஊழியர்களாயின் இடமாற்றத்திற்கு இடமுண்டு. தொழிலாளர் மத்தியில் பதட்ட நிலை தோன்றும். குடும்பத்தில் பொறுமையும் கல்வியில் ஊக்கமும்வேண்டும்.

(மிகுதி நாளை)

## முல்லைத்தீவு அகதி முகாம்களிலுள்ள 9,000 மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவிலுள்ள 10 அகதிகள் முகாம்களிலுள்ள 9,000 மக்கள் பட்டினிச்சாவை எதிர் நோக்கியுள்ளனர்.


லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film - Action packed)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-30,
சிவாஜி, லக்ஷ்மி
தியாகம்
(கலர்)


இங்குள்ள அகதிகள் நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரேயொரு தாதிமட்டுமே இந்த முகாம்களில் கடமையாற்றி வருகிறார். மருத்துவசதிகளும் இந்த அகதிகளுக்கு இல்லை.

தென்னிந்திய திருச்சபை கிளிநொச்சியிலிருந்து 10 மூடைகளில் பால்மா வகைகளை இந்த அகதிகள் முகாம்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

கிளிநொச்சி மனித முன்னேற்ற இயக்கமும் உதவிப் பொருட்களுடன் முல்லைத் தீவுக்கு விரைந்துள்ளது.

வணபிதா ஜெபநேசன் அடிகளார் 2 டாக்டர்களை அகதி முகாம்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

முல்லைத்தீவு தென்னைமரவாடியிலுள்ள மக்கள் வீடுகளை இழந்து காடுகளில் ஒளித்திருந்து விட்டு, பயங்கரமான சூழ்நிலையில் அகதிமுகாம்களுக்கு தப்பி வந்துள்ளனர்.

இவர்களில் 3,000 பேர் பழம் பிள்ளையார் ஆலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர்

முல்லைத் தீவிலுள்ள தியேட்டர்கள், பாடசாலைகள், தேவாலயங்களில் அகதிகள் தங்கியுள்ளனர்.

முல்லைத்தீவு அகதிகளுக்கான உணவுப்பொருட்களை கிளிநொச்சி சென் திரேசா தேவாலயத்தில் ஒப்படைக்கும்படி கிளிநொச்சி பிரஜைகள் குழு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

## காங்கேசன்துறை பாதிக்கப்பட்ட மீனவருக்கு அரிசி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை பகுதியில், உழைப்பின்றி கஷ்டப்படும் மீனவர் குடும்பத்திற்கு தெல்லிப்பளை ப நோ. கூ. சங்க தலைவர் திரு சிவமகாராசா, முதல்பகுதியாக 10 மூடை அரிசியை அன்பளிப்பு செய்துள்ளார்.

பலாலி, சேந்தான் குளம், காங்கேசன்துறை, ஊறணி, வலித்தலை, ஆகிய பகுகளில் மீனவர் குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கும் குழுத் தலைவர் வண பிதா தேவராசா அடிகளாரிடம், அரிசி மூடைகள் வழங்கப்பட்டுள்ளன.

(க)

## கோலஉடைகள்

(புலோலி)

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை புலோலி உப அலுவலக வெளிக்கள ஊழியர்களுக்கு அலுவலகத்தினல் கோலஉடைகள் வழங்கப்பட்டுள்ளன.

## மணிவாக்கு

அல்லற்பட்டு ஆற்ருது அழுத கண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

— குறள்

# நமதுநோக்கு

## மீனவரும் மன்ஞரும்

மீனவர் கடல் மன்னர் (மன்ஞரல்ல). கண்காணிப்பு வலயம் செவ்வனே செயற்பட வடபகுதி கரையோரத்திலிருந்து மீனவர்களை அகற்றி மீன்பிடித்தலை நிறுத்திவிட்டதால் மீனவர் குடும்பங்கள் பட்டினியால் வாடுகின்றன.

மாற்றுத் தொழிலின்றி உதவிப் பணம் இன்றி சுமார் 2000 க்கு மேற்பட்ட மீனவ குடும்பங்கள், மயிலிட்டி, ஊறணி, லாலி, வளலாய் பகுதியைச்சேர்ந்த இடங்களிலிருந்து ஜனதிபதிக்கு அவசர கோரிக்கை விடுத்துள்ளன.

மன்ஞர் முல்லைத்தீவு போன்ற நீண்டகரையோர மாவட்டங்களில் எத்தனை குடும்பங்கள் அந்தரிக்கின்றன என்பது சரியாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணம் மாதர்முன்னணி சமர்ப்பித்த அறிக்கையின்படி சுமார் 96,000 மக்கள் அரசின் பாதுகாப்பு சட்டத்தால் பாதிக்கப்பட்டு எவ்வித உதவியுமின்றி பட்டினியால் வாடுகின்றனர்.

உங்கள் பயங்கரவாதிகளாலே இந்தநிலை ஏற்பட்டிருக்கிறதென்ற கிண்டலை நாம் குறிப்பிடும் இந்த துன்பியல் நாடகத்துக்கு விடையாக எதிர்பார்க்கவில்லை.

இன்ஞெரு போர் நடைபெறுவதாஞல் பொது மக்களைக் காப்பாற்றுவது அரசின் பெரும் பொறுப்பு. பொதுமக்கள் என்ருல் தமிழர்கள், பாதிக்கப்பட்டவர்கள். பயங்கரவாதிகள் என்ருலும் தமிழர்கள் பாதிப்பை ஏற்படுத்தியவர்கள்; எனவே தமிழ் மீனவர்களை பட்டினிச் சாவிலிருந்து தட்பவைக்கும் பொறுப்பு எமக்கில்லையென்று ஜெயவர்த்தஞ அரசு மட்டுமல்ல, நாட்டை ஆளும் பொறுப்புடைய எந்த அரசும் சொல்லத் துணியாது.

அரச நிருவாகத்தினர் இந்த அவசர வேண்டுகோளை அசட்டை செய்கிருரோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது இன்று எவ்வித வசதியுமின்றி அலட்சியத்துக்குள்ளான சமூகம், வடபகுதி மீனவர் சமூகமென்பதை உணர்ந்து உடனடி உதவியில் இறங்க வேண்டும் அரசாங்கத்தை மட்டும் நம்பியிராமல் தொண்டர் சமூகங்கள் இந்தப்பொறுப்பில் பங்கு கொள்ள வேண்டுமென்று நாம் சொல்ல வேண்டுமா?

பட்டினிச்சாவு மட்டுமல்ல உயிர்ப்பலியை அஞ்சிவாழ வேண்டிய நிர்ப்பந்தம் கரையோர மக்களுக்கு அதிகரித்திருக்கிறது.

அண்மையில் 53 மீனவர் இங்கிருந்து உயிரைப்பணயம்வைத்து நாகபட்டினம் சென்றுசெய்தி அவர்கள் ''கள்ளத்தோணி''கள் மட்டுமல்ல, உயிரைக்காக்கவே என்பதை வெளிப்படுத்தியது.

கொக்கிளாய், நாயாறு மீனவர் திட்டங்களில் சிங்கள மீனவர் 'பயங்கரவாதிகளால்'' தாக்கப்பட்டதை நாம் கண்டித்திருந்தோம்; எதுசரி எதுபிழையென்று தெளிவாக ஆராயமுடியாத நிலையில் சாதாரண ஏழை மக்களின் உழைப்பையும் உயிரையும் பறிக்கும் செயல் யார் செய்தாலும் அது கொடுமையிற் கொடுமை. இதனை நிறுத்த முடியாத நிலையில் அரசின் ராணுவ அட்டூழியங்கள் கட்டுக்கடங்காது தொடர்வதைக் கண்டித்து நாட்டு மக்கள் அனைவரின் எதிர்ப்பை அரசுக்கு உணர்த்தவே 'மன்ஞரும்' என்று தலையங்கத்தில் சேர்க்கப்பட்டது.

மன்ஞர் இலங்கையின் பஞ்சாப் என்று கொள்ளலாமா? வங்காலையைப் பொற்கோயில் என்று கொள்ளலாமா? ராணுவத்தின் கூற்றை அரசு ஏற்றுக் கொண்டால் இன்று வடபகுதியில் ஆயிரக்கணக்கில் பலியாகும் அப்பாவி மக்கள் பற்றி 'அரோகரா' சொல்ல வேண்டியதுதான்.

மன்ஞர் சம்பவம் பற்றிய விசாரணை உண்மையை வெளிப்படுத்தவேண்டும். தேவாலயத்தில் வண. பிதா எம் பஸ்தியாஞும் இரு சிறுவர்களும் கொலையான செய்தி விசாரணையின் போது இன்று வடபகுதியில் தொடரும் ராணுவ நடவடிக்கைகள் பயங்கரவாதத்தை ஒழிக்கவா அல்லது வளர்க்கவா வென்பதை விளக்கி வற்புறுத்தும்.

## ராணுவம்...

(1ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி]

பிரஜைகள் குழு இணைப்பதிகாரியை சந்தித்தபோது இத்தகவல் தெரிவிக்கப்பட்டதாக குழுவின் செயலாளர் டாக்டர் எஸ். வி. பரராஜசிங்கம் தெரிவித்தார்.

லைசன்ஸ் உள்ள தமிழ் மக்களுக்கு அவர்களுடைய பாதுகாப்பினை முன்னிட்டு துப்பாக்கிகளை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்கள் துப்பாக்கிகளை பாதுகாக்க முடியுமாஞல் மட்டுமே வழங்கப்படும்எனவும் இணைப்பதிகாரி கூறியுள்ளாராம்.

## முதலியார் சின்னத்தம்பி காலமானர்

(யாழ்ப்பாணம்)

பிரபல சமூக சேவகரும் காந்திய சேவா சங்க முன்னாள் தலைவருமான வட்டுக்கோட்டை முதலியார் செ சின்னத்தம்பி நேற்று மாலை காலமானார். அவருக்கு வயது 72.

## பிரஜைகள் குழுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் பிரஜைகள் குழுக்களின் தலைவர்கள், செயலாளர்களின் இணைப்புக்குழுக் கூட்டம் ஒன்று இன்று யாழ் முனிசிப்பல்சபை ஆலோசனை மண்டபத்தில் நடைபெற விருக்கிறது.

'பூஸா' விலுள்ள தமிழ் இளைஞர்கள் தம் உறவினர்களுக்கு எழுதிய கடிதங்களில் ஏற்கனவே வழங்கப்பட்டவைகளைத் தவிர்ந்த மீதமிருப்பவை இக்கூட்டத்தின் போது பகுதி குழுக்களின் தலைவர்களிடம் கொடுக்கப்படும்.

## அனுமதிப்பத்...

(1ம்பக்க 3ம் கலத்தொடர்ச்சி)

ஆயுதப்படையினர் செல்லும் வீதிகளில், மக்கள் தங்கள் வழக்கமான அலுவல்களைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, திடீரென ஒருவர் ஓடிஞல் அவர்மீது சந்தேகம் எழுகிறது. ஆகையால் ஆயுதப்படையினரும் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது.

எவரும் ஓடாமல் அவ்விடத்தில் நின்று, ஆயுதப்படையினருக்கு அடையாள அட்டையை காட்டவேண்டும். பொதுமக்கள் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். [க]

## ஆலயத்துள்...

(1ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

ருேம். 36 வயது நிரம்பிய அடிகளார் ஏழை மக்களின் நல்வாழ்வுக்காக மன்ஞர் மறை மாவட்டத்தில் அரும்பாடுபட்டு உழைத்த தியாகம் நிறைந்த பணியாளன் மன்ஞர் மறைமாவட்ட கத்தோலிக்க மக்களும் நாமும் கடவுளின் மனிதஞன இவருக்கு எதிரான மனிதாபிமானமற்றதும் கொடுமைநிறைந்ததும்நினைக்க முடியாததுமான இந்த வன்செயலையிட்டு ஆழ்ந்த மனவேதனையடைகின்ருேம். அவரது சடலம் நல்லடக்கத்திற்கு கையளிக்கப்படும்என இன்னமும் எதிர்பார்க்கின்ருேம்.

வங்காலை ஆலயத்தினுள் ஆயுதங்களும் வெடிமருந்துகளும் கண்டெடுக்கபட்டதாகவும், ஆலயம் ஆயுதப்படையினருக்கு எதிராக தாக்கல்செய்யும் தளமாக பயன்படுத்தப்பட்டதாகவும் குறிப்பிடும் அரசின் சமூகத் தொடர்பின் சாதனங்களின் பிழையான அறிக்கைக்கு எமது கடுமையான எதிர்ப்பை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்ருேம்.

### அத்துமீறிய செயல்

வங்காலைக் கிராமத்தில் உயிர்இழந்த அப்பாவி மக்களின் படுகொலைக்கும் கண்டனம் தெரிவித்துக்கொள்கிருேம் மேலும் வங்காலை கிராமத்தின் திருக்குடும்பக் கன்னியர் மடத்தினுள் ஆயுதப்படையினர் அத்துமீறிச் சென்றதுக்கும் எமது எதிர்ப்பை தெரிவித்துக் கொள்ளுகின்ருேம்.

மன்ஞர் மறை மாவட்ட மக்களும் குருக்களும் நாஞம் எல்லாவிதமான வன்செயல்களையும் கண்டனம் செய்வதுடன் மன்ஞர் மக்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் அரசு தக்க பாதுகாபபு அளிக்கவேண்டுமெனவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிருேம்.

இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து விரிவடையக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதால் இவை மீண்டும் நிகழாவண்ணம் நடவடிக்கை எடுக்குமாறு மேன்மைதங்கிய ஜஞதிபதி அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்ருேம்.''

## விண்ணப்ப...

[1ம் பக்க 3ம் கலத்தொடர்ச்சி]

சைக்கிள் உரிமையாளர்கள் தயாரித்துக் கொள்ளலாம் என்று இம்மாநாட்டில்முடிவு செய்யப்பட்டது.

### படிவத்தின் அளவு

$7\frac{1}{2}$ அங்குலம் அகலம், 12 அங்குலம் நீளம் உடையதாக இந்த விண்ணப்பப்படிவம் இருக்க வேண்டும். இதன் இடப்புறத்தில் 2 அங்குலம் அகலமான இடைவெளிவிடப்பட வேண்டும்.

இவற்றுடன் இப்படிவத்தில் கீழ் வரும் விபரங்கள் ஒழுங்காகத் தரப்பட்டிருக்க வேண்டும்.

'வாகன உடைமைக்கும், பாவனைக்குமான அதிகாரம் வழங்கல் பத்திர விண்ணப்பம்' என்று அப்பத்திரத்துக்கு தலையங்கமிடப்பட வேண்டும்.

இதன் கீழ் விண்ணப்பதாரரின் முழுப் பெயர், முகவரி, தொழில், தேசிய அடையாள அட்டை இலக்கம், வாகன இலக்கம், 1984-85ஆம் ஆண்டுக்கான இறைவரி அனுமதி இலக்கத்தகடு பெற்ற பற்றுச்சீட்டு இலக்கம், இறைவரி அனுமதிப்பத்திரம் வழங்கும் அதிகாரி ஆகிய விபரங்கள் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

கூடவே தமதுபாவனைக்குஅவசியமான வீதிகளும்குறிப்பிடப்படவேண்டும்.

இவ்விபரங்களுக்குக் கீழே, 'மேற்குறிப்பிடப்பட்டவை உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன். ஒழுங்குவிதி 7(1)ன் கீழ் வாகன உடைமைக்கும், கீழ்க்காணும் ஒழுங்கு விதியின் கீழ் வாசனப் பாவனைக்கும் அதிகார அளிப்பை வேண்டுகிறேன் ஒழுங்குவிதி 8 (1) ஒழுங்குவிதி 8 (2) என்று குறிப்பிட்டு, விண்ணப்பதாரியின் கையொப்பமிடப்பட வேண்டும்.

இவ் விண்ணப்ப பத்திரங்கள் அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபர்பிரிவு காரியாலயங்களில் கையளிக்கப்பட வேண்டும். இதனைப் பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சிசீட்டு வழங்கப்படும். தொடர்ந்து பத்து தினங்களில் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

நெருக்கடியைத் தவிர்க்கும் வகையில் சைக்கிள் பாவனையாளர்கள் உடனடியாக விண்ணப்பங்களைக் கையளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக காலக்கெடு எதுவும் விதிக்கப்படவில்லை. ஆஞல் தாமதத்தைத் தவிர்க்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (கி)

## சாவகச்சேரி...

[1-ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி

மாக பல வர்த்தக ஸ்தாபனங்கள் திறக்சப்படவில்லை,

நேற்றுப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் இங்குள்ள டிறிபேக் கல்லூரி, இந்துக் கல்லூரி, மகளிர் கல்லூரி ஆகியவைகளுக்கு மாணவ, மாணவிகள் சமுகமளிக்காததால் இப்பாடசாலைகள் எதுவும் இயங்கவில்லை.

## நீதிமன்றில் கொள்ளை

[வேலணை]

காவலூர் மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஆயுதம் தரித்த இனந்தெரியாத கோஷ்டியொன்று நுழைந்து அங்குள்ள தமிழ் தட்டச்சு இயந்திரமொன்றினையும், தொலைபேசி சாதனம், இரும்புப் பெட்டி ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.


## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் ஆறுமுகம்

(மலாயன் பென்சனியர்)

மானிப்பாயைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் வ. ஆறுமுகம் காலமாஞர் இவர் ராசலட்சுமியின் அன்புக்கணவரும் சரவணபவன், (பொறியியலாளர் world Bank), நாகேஸ்வரி [இளைப்பாறிய ஆசிரியை வேம்படி மகளிர் கல்லூரி) யின் அன்புத்தந்தையும் து. பத்மநாதன் (கணக்காளர், சிங்கப்பூர்) பத்மினி ஆகியோரின் அன்புமாமஞரும், சித்திராஞ்சன், நிறஞ்சன், கலியாணி, சுபத்திரா, ஐங்கரன் ஆகியோரின் அன்புப் பேரஞுமாவார் அன்ஞரின் ஈமக்கிரிகைகள் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் 8 - 1 - 85 செவ்வாய்க்கிழமை மு. ப. 10-00 மணிக்கு நடைபெறும்.

196, புன்ஞலை வீதி, மானிப்பாய். 1281

## மரண அறிவித்தல்

### கோவிந்தபிள்ளை முருகேசு

வயாவிளான் பெரியண்ணன் தோட்டத்தைச் சேர்ந்த திரு கோவிந்தபிள்ளை முருகேசு அவர்கள் காலமாஞர்கள் அன்ஞர் கந்தப்பிள்ளை செல்லம்மாவின் அன்புக்கணவரும், நடராசா, இராசயோகம், கனகரத்தினம் (காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை) ஜெயசிங்கம் (பூநகரி உதவி அரசாங்க அதிபர் பணிமனை) மகேஸ்வரராசா, (சவூதிஅரேபியா) இராசலட்சுமி, புவனலட்சுமி, விஜியலட்சுமி ஆகியோரின் அன்புத்தந்தையும் சுசீலாதேவி, காலஞ்சென்ற பரராசசிங்கம் (பலாலிவிமானநிலையம்) விஜியலட்சுமி, இந்திராதேவி (பாண்டியன் குளம்) அ. த. க. பாடசாலை) சிவமலர், அமிர்தலிங்க [தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்) விக்னேஸ்வரன் (சவூதி அரேபியா] ஆகியோரின் அன்புமாமஞரும், சசிலேகா, சசிதரன், சசிரூபன் (மகாஜஞக்கல்லூரி), சுபாசினி, தர்சினி, சபேன், ஜசிந்தன், மிதிலா, யசோதா, சங்கீதா, ஜனந்தன், சுகிந்தன், கேசவன் ஆகியோரின் அன்புப் பேரஞும், காலஞ்சென்ற மலேசியா கோவிந்தபிள்ளை ஆறுமுகத்தின் அன்புச் சகோதரஞம், கந்தப்பிள்ளை கதிரித்தம்பியின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்ஞரின் ஈமைக்கிரிகைகள் 8 - 1 - 1985 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அன்ஞரின் இல்லத்தில் நடைபெற்று குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்ருேம்.

— மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

1270


இப்பத் திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone number 22389-24126.